(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 149.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 மே 19, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

120/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சீனாவிலிருந்து சேதனப் பசளை இறக்குமதி செய்தமை தொடர்பாக கணக்காய்வு அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் சீன சேதனப் பசளையை இறக்குமதி செய்தமையால் ஏற்பட்டுள்ள நிதி இழப்பு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கணக்காய்வு அறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

363/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், மண்முனை தெற்கு, எருவில்பற்று பிரதேச செயலகப் பிரிவின் மாங்காடு பிரதேசத்தில் தபால் அலுவலகமொன்று இல்லாதிருப்பதனால் குறித்த பிரதேச மக்கள் சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள செட்டிபாளையம் தபால் அலுவலகத்திற்குச் செல்வதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மாங்காடு பிரதேசத்தில் தபால் அலுவலகமொன்றை அமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தனியார் கட்டிடத்தில் அமைந்துள்ள களுவாஞ்சிக்குடி தபால் அலுவலகத்தில் போதிய வசதிகள் இல்லை என்பதை அறிவாரா;

(ii) தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடம் இன்றளவில் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதை அறிவாரா;

(iii) ஆமெனில், மேற்படி கட்டிடத்தை புனரமைத்து தபால் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) போரதீவுப்பற்று, வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள, பாலையடிவட்டை கிராமத்திலுள்ள தபால் அலுவலகம் அமைந்துள்ள காணியின் ஒரு பகுதி இதுவரை இராணுவத்திடம் உள்ளதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி காணியை இராணுவத்திடமிருந்து விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

என்பதை மேலும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

588/2025

கௌரவ ரோஹண பண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மிகவும் முக்கியமான ஒரு திணைக்களம் எனும் விடயத்தை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இத்திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் இன்றளவில் அங்கு கடமையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தற்போது இத்திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிக்கு ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) தற்போது யானை-மனித மோதல் அதிகரித்து வருகின்ற நிலையில் மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் வனசீவராசிகள் திணைக்களத்திற்குத் தேவையான ஏனைய வளங்களை வழங்குவதற்கும் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1886/2026

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்முனை மாநகர சபை தற்போது செயல்பாட்டுப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளது என்பதையும்;

(ii) அத்தியாவசியமான இயந்திர உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் தொழில்நுட்பச் சாதனங்களின் பற்றாக்குறையானது மேற்படி பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது என்பதையும்;

(iii) மேற்படி குறைபாடுகள் காரணமாக திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவம், வீதிப் பராமரிப்பு, வடிகாலமைப்பு நடவடிக்கைகள் மற்றும் பொதுச் சுகாதார சேவைகள் அடங்கலான பொதுச் சேவைகள் சீர்குலைந்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மாநகர சபையின் இயந்திர உபகரணங்கள் மற்றும் கொள்திறன் தேவைகளை அடையாளம் காண்பதற்கு உத்தியோகபூர்வ மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மதிப்பீடு மூலம் அடையாளம் காணப்பட்டுள்ள தேவைப்பாடுகள் யாவை என்பதையும்;

(iii) தேவைப்படும் வளங்களின் வழங்கலுக்காக வகுத்தமைக்கப்பட்டுள்ள காலச்சட்டகம் யாதென்பதையும்;

(iv) முறைசார்ந்த மற்றும் நிரந்தரமான சேவையொன்றின் வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக மாநகர சபைக்குத் தேவைப்படும் வாகனங்களையும் இயந்திர உபகரணங்களையும் வழங்குவதற்கு துரித அல்லது நீண்டகாலத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1925/2026

கௌரவ தேவானந்த சுரவீர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாணத்திலுள்ள அரசாங்க பாடசாலைகளில் 5 – 16 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கு கட்டாயக் கல்விப் பணிப்புரையை அமுல்படுத்துவதற்கான பாடசாலைக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளனவா;

(ii) அவ்வப்போது, நீண்ட காலமாக மற்றும் முற்றாகப் பாடசாலை செல்லாத சிறுவர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா;

(iii) ஆமெனில், மேற்படி சிறுவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் அடைவு மட்டம்

குறைவான மற்றும் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட சிறுவர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா;

(ii) மேற்படி சிறுவர்களை இனங்காண்பதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் யாவர்;

(iii) அடைவு மட்டம் குறைவான சிறுவர்களின் எண்ணிக்கை யாது;

(iv) விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட சிறுவர்களுக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை;

(v) பாடசாலைக் கல்வியை விட்டு விலகிச் செல்லும் சிறுவர்களை மீண்டும் பாடசாலைமயப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்று உள்ளதா;

(vi) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(இ) இன்றேல், ஏன்?

6.

1949/2026

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வத்தளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாபோலை, பாத்திமா வீதி விளையாட்டு மைதானம், வத்தளை மாபோலை நகர சபைக்கு கையகப்படுத்தப்பட்ட விதம் யாதென்பதையும்;

(ii) மேற்படி காணி வத்தளை மாபோலை நகர சபையின் முன்னாள் தவிசாளருக்குச் சொந்தமானது என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) நகர சபையின் தவிசாளராக அவர் கடமையாற்றி வரும் போது, தனக்குச் சொந்தமான ஒரு காணியை நகர சபைக்கு விற்பனை செய்வதற்கு வாய்ப்புள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சதுப்பு நிலமொன்றாகவிருந்த மேற்படி காணி, போலி உறுதியொன்று தயாரிக்கப்பட்டு விற்பனைசெய்யப்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி காணியைக் கொள்வனவுசெய்வதற்கு நகர சபை செலவிட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கொள்வனவு, சட்டமுறையானதா என்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி கொள்வனவோடு தொடர்புபட்ட அலுவலர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1975/2026

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வலதுகுறைந்த பிள்ளைகளில், 3 தொடக்கம் 5 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களில் முன்பள்ளிகளுக்குச் செல்பவர்களின் சதவீதம் யாதென்பதையும்;

(iii) அந்தப் பிள்ளைகளின் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்காக சமமானதும் நியாயமானதுமான வாய்ப்புகளை வழங்குவதற்கு முறையானதொரு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) குறைந்த வருமானத்தை ஈட்டும் குடும்ப அலகுகளில் உள்ள மாற்றுத்திறனுள்ள பிள்ளைகளை முன்பள்ளிக் கல்வியின்பால் ஆற்றுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) அரசாங்க மற்றும் தனியார் முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாற்றுத்திறனுள்ள பிள்ளைகளுக்கு முறையான வசதிகளும் சேவைகளும் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(vi) அவ்வாறாயின், அத்தகைய சேவைகளும் வசதிகளும் யாவை என்பதையும்;

(vii) மாற்றுத்திறனுள்ள பிள்ளைகளை முன்பள்ளிகளில் அனுமதிப்பதற்கென வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டிகளும் சுற்றறிக்கைகளும் யாவை என்பதையும்;

(viii) முன்பள்ளி ஆசிரியர்களுக்கு, சிறப்புக் கல்விக்கான தேவையுடைய பிள்ளைகளுடன் செயற்படுவதற்காக வழங்கப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1981/2026

கௌரவ (சட்டத்தரணி) அனுராத ஜயரத்ன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தில் —

(i) தித்வா புயல் காரணமாக ஏற்பட்டுள்ள பிரதான அனர்த்தங்கள் யாவை என்பதையும்;

(ii) மக்களின் காணி இழப்புகள், சேதமடைந்த வீடுகள் மற்றும் சேதமடைந்த வணிக நிறுவனங்கள் பிரதேச செயலக வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) சேதமடைந்த மதத் தலங்கள் மற்றும் மேற்படி சேதங்களின் நிதிப் பெறுமதி வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) வீடுகளை இழந்ததால் வாடகை வீடுகளில் வசிப்போர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு செலுத்தப்பட்டுள்ள மொத்த இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) சேதமடைந்த வீடுகளுக்காக முன்மொழியப்பட்டுள்ள புதிய வீட்டுத் திட்டங்களின் எண்ணிக்கையும் இன்றளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அத்தகைய திட்டங்களின் எண்ணிக்கையும் யாவை என்பதையும்;

(vii) இன்றளவில் மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(viii) உடபலாத்த பிரதேச செயலகப் பிரிவின், கம்பளை நகரில் வணிக நிறுவனங்கள் சேதமடைந்துள்ள வர்த்தகர்களில் இன்றளவில் இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1988/2026

கௌரவ சந்தன தென்னகோன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாது;

(ii) அந்த நிறுவனத்தை நிறுவியதன் நோக்கங்கள் யாவை;

(iii) அந்த நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு யாது;

(iv) தற்போது அந்த நிலப்பரப்பினுள் உள்ள கட்டிடங்களின் எண்ணிக்கை யாது;

(v) தற்போது அந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தில் நடாத்தப்படும் பாடநெறிகள் யாவை;

(ii) அந்த நிறுவனத்திற்கு முதன்முதலாக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆண்டு யாது;

(iii) அந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது;

(iv) இதுவரையில் அந்தப் பாடநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது;

(v) அந்தப் பாடநெறிகளுக்கு கடைசியாக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆண்டு யாது;

(vi) அந்தப் பாடநெறிகளுக்கு நிகரான பாடநெறிகளை நடாத்தும் அரச அல்லது தனியார் நிறுவனங்கள் உள்ளனவா;

(vii) அவ்வாறாயின், அவை யாவை;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— சேர்பெறுமதி வரி (திருத்தம்),— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 மார்ச் 23 ஆம் திகதிய 2481/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 மார்ச் 31 ஆம் திகதிய 2482/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 ஏப்ரல் 02 ஆம் திகதிய 2482/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 1),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 37 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 21302 “வெளியீடுகளை அச்சிடுதல் மற்றும் விற்பனை - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 14,500,000,000 இலிருந்து ரூபா. 9,000,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 14,500,000,000 இலிருந்து ரூபா. 5,000,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | ரூபா. 10,000,000,000 இலிருந்து ரூபா. 3,000,000,000 வரை |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 2),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 38 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 38

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 22302 “களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு (வெடிபொருட்கள்) - இலங்கை கடற்படை” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 2,500,000,000 இலிருந்து ரூபா. 800,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 3,000,000,000 இலிருந்து ரூபா. 1,175,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | ரூபா. 700,000,000 இலிருந்து ரூபா. 375,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 3),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 39 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 39

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 24702 “கைப்பற்றப்பட்ட தடுத்து வைக்கப்பட்ட பொருட்களுக்கான செலவினங்கள் – இலங்கைச் சுங்கம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 8,000,000 இலிருந்து ரூபா. 1,500,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 4),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 40 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 40

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 25002 “ஏனைய அரசுகள்சார்பான முற்பணக் கொடுப்பனவுகள் - அரச கணக்குகள் திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 800,000 இலிருந்து ரூபா. 570,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 5),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 41 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 41

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 28502 “விவசாய பண்ணைகள் பராமரிப்பு மற்றும் விதை விற்பனைகள் - கமத்தொழிற் திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 1,250,000,000 இலிருந்து ரூபா. 1,150,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 1,250,000,000 இலிருந்து ரூபா. 1,150,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 6),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 42 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 42

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 30602 “புகையிரதக் களஞ்சியங்கள் முற்பணக் கணக்கு – இலங்கைப் புகையிரதத் திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 3,000,000,000 இலிருந்து ரூபா. 2,000,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 7),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 43 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 43

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 31002 “அரசாங்க தொழிற்சாலைக் களஞ்சிய முற்பணக் கணக்கு – அரசாங்கத் தொழிற்சாலை திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 60,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 8),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 44 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 44

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 31003 "அரசாங்க தொழிற்சாலை பணி நிறைவு முற்பணக் கணக்கு – அரசாங்கத் தொழிற்சாலை திணைக்களம்" இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 450,000,000 இலிருந்து ரூபா. 325,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 9) ,— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளைகள் கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(இக்கட்டளைகள் 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும். )

**அட்டவணை**

(இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணைக்கமைவாக)

### அட்டவணை

## 2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளைகள்

2025 ஆம் நிதியாண்டு தொடர்பில் 2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 8 ன் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம், அரசாங்க ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்குவது சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்கள் பற்றிய அட்டவணை.

### குழுக்கட்டளை இலக்கம். 01

2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம், இதனுடன் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற விதத்தில் அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளின் விடய இலக்கங்கள் 00801, 01101, 02101, 10201, 11201, 11601, 13501, 14901, 15101, 17101, 18601, 21901, 22801, 23801, 24301, 24401, 24801, 24901, 25601, 25701, 26201, 26301, 26501, 28001, 28101, 28901, 29001, 29201, 29701, 29901, 30001, 30301, 30701, 31101, 33201 மற்றும் 33801 ஆகியன தொடர்பான அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறையினைத் திருத்துவதோடு, அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகளையும் மாற்றுகின்றேன்:-

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | செலவின இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரச செயற்பாட்டு வரவிற்கான ஆகக்குறைந்த எல்லைகள் | | IV அரச செயற்பாட்டு பற்று மீதிக்கான உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 00801 | - | - | 4,500,000 | 3,900,000 | - | - | 1 |
| 2. | நிதி ஆணைக்குழு அலுவலகம் | 01101 | - | - | 3,200,000 | 2,800,000 | - | - | 2 |
| 3. | தேசிய கணக்காய்வு அலுவலகம் | 02101 | - | - | - | - | 200,000,000 | 245,000,000 | 3 |
| 4. | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் | 10201 | 20,000,000 | 20,353,000 | - | - | - | - | 4 |
| 5. | வெளிநாட்டலுவல்கள்,வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் | 11201 | - | - | - | - | 130,000,000 | 170,000,000 | 5 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் | 11601 | - | - | 9 ,000,000 | 5,000,000 | - | - | 6 |
| 7. | பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் | 13501 | - | - | - | - | 100,000,000 | 120,000,000 | 7 |
| 8. | கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் | 14901 | 200,000,000 | 200,600,000 | - | - | - | - | 8 |
| 9. | கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் | 15101 | - | - | 8,000,000 | 7,760,000 | - | - | 9 |
| 10. | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் | 17101 | - | - | 47,000,000 | 40,000,000 | - | - | 10 |
| 11. | டிஜிட்டல் பொருளாதார அமைச்சர் | 18601 | - | - | - | - | 3,500,000 | 9,000,000 | 11 |
| 12. | விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் | 21901 | - | - | 11,000,000 | 10,711,700 | - | - | 12 |
| 13. | நீதிமன்ற நிர்வாகம் | 22801 | 550,000,000 | 550,737,401 | - | - | - | - | 13 |
| 14. | அரசிறைக் கொள்கைத் திணைக்களம் | 23801 | - | - | 3,000,000 | 2,500,000 | - | - | 14 |
| 15. | அபிவிருத்தி நிதித் திணைக்களம் | 24301 | - | - | 4,000,000 | 3,750,000 | - | - | 15 |
| 16. | வர்த்தக முதலீட்டு கொள்கைத் திணைக்களம் | 24401 | - | - | 3,000,000 | 2,900,000 | - | - | 16 |
| 17. | மதுவரித் திணைக்களம் | 24801 | - | - | 45,000,000 | 41,000,000 | - | - | 17 |
| 18. | திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் | 24901 | - | - | 6,000,000 | 5,000,000 | - | - | 18 |
| 19. | மாவட்டச் செயலகம், கம்பஹா | 25601 | - | - | 150,000,000 | 135,000,000 | - | - | 19 |
| 20. | மாவட்டச் செயலகம், களுத்துறை | 25701 | - | - | - | - | 350,000,000 | 372,000,000 | 20 |
| 21. | மாவட்டச் செயலகம், மாத்தறை | 26201 | - | - | - | - | 260,000,000 | 360,000,000 | 21 |
| 22. | மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை | 26301 | - | - | - | - | 250,000,000 | 275,000,000 | 22 |
| 23. | மாவட்டச் செயலகம் / கச்சேரி - மன்னார் | 26501 | - | - | 20,000,000 | 17,500,000 | 80,000,000 | 83,000,000 | 23 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 24. | கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் | 28001 | - | - | 5,000,000 | 3,700,000 | - | - | 24 |
| 25. | கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 28101 | 350,000,000 | 351,682,850.41 | - | - | - | - | 25 |
| 26. | ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களம் | 28901 | - | - | 45,000,000 | 40,000,000 | - | - | 26 |
| 27. | கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களம் | 29001 | - | - | 25,000,000 | 24,400,000 | - | - | 27 |
| 28. | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 29201 | - | - | 25,000,000 | 23,000,000 | - | - | 28 |
| 29. | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | 29701 | - | - | 6,000,000 | 5,900,000 | - | - | 29 |
| 30. | தேசிய புலமைச்சொத்து இலங்கை அலுவலகம் | 29901 | - | - | 4,000,000 | 3,000,000 | - | - | 30 |
| 31. | உணவு ஆணையாளர் திணைக்களம் | 30001 | - | - | 4,000,000 | 3,100,000 | - | - | 31 |
| 32. | நெசவுக் கைத்தொழில் திணைக்களம் | 30301 | - | - | 5,000,000 | 4,800,000 | - | - | 32 |
| 33. | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் | 30701 | - | - | 40,000,000 | 35,000,000 | - | - | 33 |
| 34. | தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களம் | 31101 | - | - | 9,200,000 | 6,700,000 | - | - | 34 |
| 35. | தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களம் | 33201 | - | - | 12,000,000 | 11,321,006 | - | - | 35 |
| 36. | பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம் | 33801 | - | - | - | - | 4,500,000 | 9,500,000 | 36 |

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழான தீர்மானம்,— மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தொடர்பாக 2025.03.10 மற்றும் 2025.03.21 ஆகிய திகதிகளில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்த விடயங்களை உள்ளடக்கியதான, 2025 ஜூலை 25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 243ஆம் இலக்க பாராளுமன்ற வெளியீட்டுத் தொடரான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையானது, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் ஏற்பாடுகளுக்கமைய சட்டத்துறை தலைமையதிபதியின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது

*16.

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*22.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— “2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக.” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

23.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

நிகழ்நிலைக் காப்புச்சட்டம் (இரத்துச் செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

1972/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2026 ஆம் ஆண்டின் போதுள்ளவாறாக, குறைந்த வருமானம் கொண்ட, நடுத்தர வருமானமுடைய, கிராமிய, பெருந்தோட்ட, மற்றும் சேவைகள் முறையாகக் கிட்டாத நகர்ப்புறம் என்ற ரீதியில் வேறாக்கப்பட்ட, உத்தியோகபூர்வ ரீதியாக மதிப்பிடப்பட்ட, தேசிய வீடமைப்புப் பற்றாக்குறையினை வெவ்வேறாகவும்;

(ii) 2026-2029 காலப்பகுதிக்காக மதிப்பிடப்பட்ட அலகு விநியோக இலக்கினையும், வீட்டு வகையின் அடிப்படையில் அலகொன்றுக்கான மதிப்பிடப்பட்ட சராசரி நிர்மாணிப்புச் செலவினையும்;

(iii) தேசிய இடைநிலையளவுக் குடும்ப வருமானத்தின் கீழ் உள்ள பயனாளிகளின் விகிதாசாரத்தினையும்;

(iv) தற்போதுள்ள அடைமான வீதங்கள், பணவீக்கம் மற்றும் நிர்மாணிப்புச் செலவுகளின் அதிகரிப்பு என்பவற்றுடன் ஒப்பிட்டு வீடொன்றை நிர்மாணிக்கக் கூடியதாக இருக்கும் தன்மை தரநிலைப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(v) பயனாளர்களின் தெரிவில் பிரயோகிக்கப்பட்ட புறவயமான தகுதித் தெரிவடிப்படையினையும் டிஜிட்டல் சரிபார்ப்பினையும்;

(vi) ஒழுங்கீனங்களின் காரணமாக மீளாய்வு செய்யப்பட்ட, மேன்முறையீடு செய்யப்பட்ட, அல்லது இரத்துச் செய்யப்பட்ட 2024-2025 இன் போதான ஒதுக்கீட்டுத் தீர்மானங்களின் எண்ணிக்கையினையும்;

(vii) அரசியல்மயமாக்கம் மற்றும் இரட்டிப்பு என்பவற்றினைத் தடுப்பதற்காக வெளிப்படைத்தன்மையுடைய, பகிரங்கமாக அணுகத்தக்க பயனாளர் பதிவேடு காணப்படுகின்றதா என்பதையும்;

(viii) நடுத்தர வகுப்பு வீடமைப்புத் திட்டமொன்று அமுல்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ix) அவ்வாறாயின், அதன் அமைவிடம் மற்றும் எதிர்பார்க்கப்படும் பூர்த்தியாக்கல் திகதி என்பவற்றினையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1973/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015-2022 மற்றும் 2022 முதல் இன்று வரையிலான காலப்பகுதிகளின் போது வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கையினையும் மொத்த வருவாயினையும் ஒவ்வொரு ஆண்டுக்கும் வெவ்வேறாகவும்;

(ii) இந்த 02 காலப்பகுதியினுள்ளும் ஒவ்வொரு ஆண்டுக்குமான வருகையினை நாடுகள் ரீதியாக வெவ்வேறாகவும்;

(iii) 2015-2022 காலப்பகுதியினுள் முதன்மையான 05 மூலச் சந்தைகள் யாவை என்பதையும்;

(iv) 2022 முதல் இன்று வரையிலான காலப்பகுதியினுள் மேற்குறிப்பிட்ட சந்தைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) 2022 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அடையாளம் காணப்பட்ட புதிய அல்லது வளர்ந்துவரும் சந்தைகள் மற்றும் அவற்றின் சதவீத வளர்ச்சி யாவை என்பதையும்;

(vi) மேற்குறிப்பிட்ட காலப்பகுதிகளிலும் சுற்றுலாப் பயணியொருவரின் சராசரி செலவினம் மற்றும் தங்கும் காலம் யாவை என்பதையும்;

(vii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதிகளிலும் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட மொத்த விளம்பரச் செலவினம் மற்றும் அதன் அளவிடக்கூடிய பெறுபேறுகள் யாவை என்பதையும்;

(viii) குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால அடிப்படையில் சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தினுள் வெவ்வேறாக உள்வாங்க எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் யாவை என்பதையும்;

(ix) கடந்த 05 ஆண்டுகளில் சுற்றுலாத்துறையிலிருந்து அரசாங்கத்தினால் ஈட்டப்பட்ட மதிப்பிடப்பட்ட வரி வருமானம் ஒவ்வொரு ஆண்டுக்கும் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1974/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில், கால்நடைவளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபைக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பாராதீனப்படுத்தப்பட்ட காணிகளின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்பதையும் தெளிவான காணி உறுதிப்பத்திரங்கள் இன்றி எஞ்சியுள்ள பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் வர்த்தகப் பயன்பாட்டிற்காக அல்லது கைத்தொழில் பயன்பாட்டிற்காக மாற்றப்பட்ட, குத்தகைக்கு வழங்கப்பட்ட காணித் துண்டுகள் குறித்தும் அல்லது மீளஒதுக்கீடு செய்யப்பட்ட காணித் துண்டுகள் குறித்தும், இதற்காகப் பின்பற்றப்பட்ட தெரிவடிப்படைகள் என்ன என்பதையும் அத்தகைய மாற்றங்களுக்கு அங்கீகாரம் வழங்கிய அதிகார அமைப்பு எது என்பதையும்;

(iii) மகாவலிக் காணிகளை முறையற்ற விதத்தில் ஆக்கிரமித்தமை அல்லது அக்காணிகளின் இரண்டாம் நிலைக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற சந்தர்ப்பங்கள் உள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) காணி டிஜிட்டல்மயமாக்கல், புவியியல் தகவல் முறைமை மூலம் வரைபடமாக்கல் மற்றும் பாதுகாப்பான காணி உரிமப் பத்திரங்களை வழங்குதல் என்பவற்றின் தற்போதைய நிலை என்ன என்பதையும்;

(vi) நீண்டகாலக் குடியிருப்பாளர்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் காணி ஒதுக்கீட்டில் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கம் சட்டவாக்க மறுசீராக்கல்களை மேற்கொள்வது குறித்துப் பரிசீலிக்கின்றதா என்பதையும்;

(vii) வினைத்திறனான பொருளாதாரச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படாதுள்ள காணிகளின் விஸ்தீரணம் மற்றும் அமைவிடம் எவை என்பதையும்;

(viii) கடந்த 10 வருடங்கள் ஒவ்வொன்றுக்குமாக மகாவலிக் கருத்திட்டத்தின் பொருளாதார வருவாய் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

2013/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1949 ஆம் ஆண்டின் நாணய விதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட பின்னர் சட்டங்கள் மற்றம் திருத்தங்கள் மூலம் விசேட பணிகள் பொறுப்பளிக்கப்பட்டு செயற்பட்டு வந்த இலங்கை மத்திய வங்கியின் நிறுவன ரீதியான இருப்பு, 2023 ஆம் ஆண்டின் மத்திய வங்கிச் சட்டத்தின் கீழும் தொடர்ச்சியாக செயற்படுகின்றதென்பதையும்;

(ii) மத்திய வங்கிச் சட்டத்தின் XIX ஆம் பகுதிக்கமைய 2023.09.15ஆம் திகதிக்கு முன்னதாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் நாணயச் சபைக்கு அளிக்கப்பட்ட உரிமைகளையும் பிணைப்புகள்/ பொறுப்புகளையும் மத்திய வங்கி அங்கீகரிக்க வேண்டுமென்பதையும்;

(iii) நாணய விதிச் சட்டம் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட / வெளியிடப்பட்ட நடவடிக்கைகள், உத்தரவுகள் அல்லது தீர்மானங்கள் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட / வெளியிடப்பட்டவையாக கருதப்படல் வேண்டுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) நாணயச் சபையினால் 2023.09.15 ஆம் திகதிக்கு முன்னதாக ஓய்வளிக்கப்பட்ட ஓய்வூதியதாரர்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் சமகால ஓய்வூதியத் திருத்தக் கொள்கைக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களையும் நிறுவன கொள்கைகளையும் ஆளும் சபை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துமா என்பதையும்;

(ii) இன்றேல், ஓய்வூதியதாரர்களை உள்வாங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

2014/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின் புலத்சிங்ஹல பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பரகொட, கிதுலகொட கனிஷ்ட வித்தியாலயத்தை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலை தாபிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(iii) 2015 தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள், மேற்படி பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) பாடசாலையை மூடுகின்ற போது, அங்கு கல்வி பயிலும் மாணவர்களுக்கும் பாடசாலையில் சேரவிருக்கும் மாணவர்களுக்கும் வேறு பாடசாலைகளுக்குச் செல்வதற்குள்ள தூரம் மற்றும் போக்குவரத்து அசௌகரியங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேற்படி பாடசாலையிலிருந்து மிக அருகிலுள்ள பாடசாலைக்கு உள்ள தூரம் எவ்வளவு என்பதையும்;

(vi) அதிக மழை மற்றும் வெள்ள நிலைமைகளின் போது பரகொட மற்றும் கித்துலகொட பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு மாற்றுப் பாடசாலைகளுக்குச் செல்வதிலுள்ள அசௌகரியங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) பாடசாலை தொடர்பில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானம் யாதென்பதையும்;

(viii) பாடசாலையை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?